[*2019 ஜூலை 10*

கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, மொத்தம் 320 கலைஞர்களுக்கு தலா 10,000/– ரூபாயை தன் கரங்களாலேயே அளித்த முதல்வர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் மட்டும்தான். இதுவரையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலே நடக்காத ஒரு விஷயம். அதேபோல, கலைஞர்களை மகிமைப்படுத்திய அரசாங்கம், அம்மாவின் அரசாங்கம். நாட்டுப்புறக் கலை வாரியத்திற்கு உயிர் கொடுத்து, மற்ற வாரியங்களுக்குக் கிடைக்கிற 9 benefits–*ஐயும் கொடுக்க வைத்தது மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசாங்கம்தான். இதுவரைக்கும் வேறு எந்த அரசாங்கமும் செய்யவில்லை. கலைஞர்களைப்பற்றி பல இடங்களிலே எடுத்துப் பேசியது உங்கள் அரசாங்கம். ஆனால், அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிசெய்தது அம்மாவின் அரசாங்கம் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

(அ) 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக் கோரும் இரண்டு மசோதாக்களை மேதகு குடியரசுத் தலைவர் திருப்பியனுப்பியுள்ளது பற்றிய தகவலை அவைக்குத் தெரிவிக்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் இதே அவையிலே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்* NEET *பிரச்சினை பற்றிய விவாதம் இங்கே நடைபெற்ற நேரத்திலே சில விளக்கங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் ஒருசில கருத்துகளைக் கொண்டுவர விரும்புகிறேன்.*

2019 ஜூலை 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

NEET தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று இதே சட்டமன்றத்தில் 1–2–2017 அன்று ஏகமனதாக 2 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்த 2 மசோதாக்களுக்கும் ஒப்புதல் வழங்குவதை நிறுத்தி வைத்த (withheld) மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அந்த 2 மசோதாக்களையும் திருப்பி அனுப்பி இருப்பதாக 22–9–2017–ல் மத்திய அரசின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, அவை நிறுத்தி வைக்கப்பட்டது என்றுதான் தெரிவித்தார்கள். இப்போது, நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்கள் என்று கூறினாரேதவிர, 2 மசோதாக்களும் திருப்பி அனுப்பப்பட்டு விட்டன என்று இந்த அவையில் தெரிவிக்கவில்லை. இதோ; மத்திய அரசு அனுப்பியிருக்கக்கூடிய கடிதம். Government of India, Ministry of Home Affairs என்ற துறையிடமிருந்து இந்தக் கடிதம் அரசுக்கு வந்திருக்கிறது. Secretary, Law Department அவர்களுக்கு வந்திருக்கிறது. "I am directed to refer to the State Government's letters dated 18–2–2017 on the subject mentioned and to return herewith two authenticated copies each of both the Bills wherein the Hon'ble President has withheld his assent dated 18th September, 2017 signified thereon under Article 201 of the Constitution of India" என்று கடிதம் வந்திருக்கிறது.

முற்பகல் 11–15

எனவே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் இந்த அவைக்கு உண்மைத் தகவலைக் கொடுக்காமல் மறைத்திருக்கிறார் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அரசியல் சட்டப் பிரிவு 201–ன்கீழ் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதே அரசியல் சட்டப் பிரிவின்படி, அப்படி திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்களை மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் செய்தியுடன் இந்தப் பேரவையில் 6 மாதங்களுக்குள் வைத்து, மீண்டும் நிறைவேற்றி, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பும் அதிகாரம் அதே அரசியல் சட்டப் பிரிவு 201–ல் இந்தச் சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மசோதாக்கள் திருப்பி அனுப்பப்பட்டு ஏறக்குறைய 19 மாதங்களுக்குமேல் ஆகிவிட்டதால், இனி சட்டமன்றத்திலும் இந்த இரு மசோதாக்களை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பினை நம்முடைய தமிழக சட்டமன்றம் இழந்திருக்கிறது. மசோதாக்கள் திருப்பி அனுப்பப்பட்ட பிறகும் மேதகு குடியரசுத் தலைவர்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2019 ஜூலை 10

அவர்களின் அனுமதியைப் பெற வலியுறுத்துகிறோம் என்று கடந்த 19 மாதங்களாக தமிழக மக்களை இந்த அரசு ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; அ.தி.மு.க.வினுடைய நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலும் NEET தேர்வுக்கு விலக்கு பெறுவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தும், நீங்கள் ஏமாற்றி இருக்கிறீர்கள். இது தமிழக மக்களுக்கு, NEET தேர்வால் பாதிக்கப்படக்கூடிய கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்கள் அனைவருக்கும் இந்த அரசு செய்திருக்கக்கூடிய பச்சை துரோகம் என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாக இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதற்கு தார்மீகப் பொறுப்பேற்றுக் கொண்டு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் NEET பற்றி ஒரு விளக்கத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அன்றைக்கு நான் அந்த NEET தேர்வு பற்றிச் சொல்கின்றபோதே தெளிவாகச் சொல்லியிருந்தேன். NEET—மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் 22–9–2017 அன்று அனுப்பிய கடிதத்தின் மூலமாக அந்த மசோதா நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; நிராகரிக்கப்பட்டது என்று சொல்லவில்லை. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே நான் அப்போதே உங்களுக்குச் சொன்னேன், என்ன காரணத்திற்காக, எதற்காக அந்த மசோதா நிறுத்தி வைக்கப்பட்டது என்று கேட்டு தமிழக அரசின் சார்பாக கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இன்றுவரை அதற்கான காரணத்தைத் தெரிவித்து மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து தமிழக அரசுக்கு பதில் வரப்பெறவில்லை என்பதை நான் அன்றைக்கே தெளிவாகச் சொல்லியிருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விளக்கத்தை, எடுத்துப் படித்து பாருங்கள். நான் சொன்ன விளக்கம் இருக்கிறதா என்பதைப் பாருங்கள். 'Withheld' என்றால், நமக்குத் தெரிந்த dictionary–ல் 'நிறுத்தி வைக்கப்பட்டது' என்பதுதான் அர்த்தம். இன்றுவரை அதுதான் அர்த்தம்.

[திரு. சி.வி. சண்முகம்] *2019 ஜூலை 10]*

புதிதாக இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய வழக்கறிஞர் வந்து, (குறுக்கீடு) அதைத்தான் ஒப்புக்கொள்கிறேன். இல்லையென்று, நான் சொல்லவில்லையே? கொடுத்திருக்கிறார்கள்; அதை நான் ஒப்புக்கொள்கிறேன்; நான் அதை இல்லையென்று சொல்லவில்லை. அதைத்தான் நான் அன்றைக்கே சொன்னேன். என்னை முழுவதுமாக விளக்கம் சொல்லவிடுங்கள். 'Withheld' என்று சொல்லப்பட்டதற்கு, 'என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டது? இந்த மசோதா நிறுத்தி வைக்கப்பட்டதற்கான காரணங்களை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று தமிழக அரசின் சார்பாக உடனடியாக மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரை, அந்தக் கடிதத்திற்கு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து எந்தவித பதிலும் தமிழக அரசுக்கு வரவில்லை. அந்தப் பதில் வரப்பெற்றால், இன்னென்ன காரணங்களுக்காக இந்த மசோதா நிறுத்தி வைக்கப்பட்டது; இந்தக் காரணத்திற்காக இந்த மசோதா—இப்போது மத்திய அரசினுடைய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் சொல்லியதைப்போல நிராகரிக்கப்பட்டதாக எடுத்துக்கொண்டாலும்—அவர் இப்போது சொல்லியிருப்பது 'withheld'–க்கு meaning, அவர் சொல்கிறார்; withheld means 'rejected'. அந்த e–mail–ல் கொடுத்திருப்பது—தபால்கூட இன்றுவரை வரவில்லை. இன்றுவரைகூட மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழக அரசுக்கு விளக்கம் கொடுத்து கடிதம் எதுவும் வரவில்லை. 'Withheld' என்பதற்கு, நீதிமன்றத்தில் அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசினுடைய வழக்கறிஞர், மத்திய அரசினுடைய Under Secretary*–யிடமிருந்து பெறப்பட்ட ஒரு* e–mail*–ஐ அதில் தெரிவிக்கின்றார், "withheld means it is rejected" என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். முறைப்படி தமிழக அரசுக்கு, இன்றுவரை, இன்றைய தேதி வரை, இந்த நிமிடம் வரை தெரிவிக்கப்படவில்லை. ஆனால், தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு என்ன காரணத்திற்காக இது நிறுத்திவைக்கப்பட்டது என்று கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு, இன்றுவரை பதில் வரவில்லை. அதற்கான காரணம் தமிழக அரசுக்குத் தெரிந்தால், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, மீண்டும் அந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்று அன்றைக்கே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் இருக்கிறது; காலம் கடந்துவிடவில்லை.*

[திரு. சி.வி. சண்முகம்] [*2019 ஜூலை 10*

ஏனென்றால், எப்போது 'withheld' என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அப்போதே அதற்கான விளக்கம் கேட்டு கடிதத்தை நாம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதிவிட்டோம். ஆகவே, நமக்கு Limitation இருக்கிறது. அதற்கான பதிலைக் கொடுத்து, 'இல்லை, உங்களது மசோதா நிராகரிக்கப்பட்டுவிட்டது' என்று மத்திய அரசாங்கம் நமக்குத் தெளிவாக ஒரு பதிலைச் சொல்லியிருந்தால், அதிலிருந்து நீங்கள் சொல்கின்ற இந்தக் காலதாமதம், Limitation நமக்கு இருக்கும். ஆனால், இன்றுவரை பதில் வரவில்லை. ஆக, என்றைக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழக அரசுக்கு இது நிராகரிக்கப்பட்டது என்று தெரிவித்து பதில் வருகிறதோ, அன்றையதினத்திலிருந்து நமக்கு சட்டமன்றத்தில் அந்த மசோதாவை மீண்டும் நிறைவேற்றுவதற்கான அதிகாரம் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இது தொடர்பாக நீங்கள் எந்த சட்டரீதியான நடவடிக்கையைக் கொண்டுவந்தாலும் அதை நான் சந்திக்கத் தயார். நான் ராஜினாமா செய்வதற்கும் தயார்; நீங்கள் தயாரா? நீங்கள் ராஜினாமா செய்வதற்குத் தயாரா? (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு மாதத்திற்குப் பிறகு இதை இந்த அவையிலே வைத்து மறுபடியும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை நான் இங்கே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால் இந்தக் கடிதம் வந்து 19 மாதங்கள் ஆகியிருக்கின்றன. அதற்குப் பிறகு எத்தனையோ முறை சட்டமன்றமும் கூடியிருக்கிறது. இந்த நிலையில், ஏன் இந்த அவையிலே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதுகுறித்துத் தெரிவிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் சொல்கிறேன்; ஆறு மாதத்திற்குப் பிறகு நிச்சயமாக இந்தச் சட்டமன்றத்திலே அதைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பே கிடையாது என்று நான் சொல்லியிருக்கிறேன். இதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு விளக்கத்தைச் சொல்கிறார்கள். ஆனால், இந்த விளக்கத்தை நேற்றைக்கு முன்தினம் நாங்கள் கேட்டதற்குப் பிறகுதான், இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறாரே தவிர, இடைப்பட்ட

2019 ஜூலை 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

நேரத்தில் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்ற நிலையிலே ஏன் அவையில் சொல்லவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. இப்போது அவர் "நீங்கள் ராஜினாமா செய்யத் தயாரா?" என்று கேட்கிறார். நான் இருக்கக்கூடிய விதிமுறையை வைத்துச் சொல்கிறேன். அந்த அடிப்படையில்தான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏட்டிக்குப் போட்டியாக பேசிக்கொண்டிருந்தால், (குறுக்கீடுகள்) மாணவர்களுடைய வாழ்வாதாரம்தான் பாதிக்கப்படுமே தவிர, வேறல்ல. ஆகவே, இதற்கு அவர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் நான் சொல்லியிருக்கிறேன். இதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, அதுகுறித்து இந்த அவையிலே தெரிவிக்கத் தவறிய காரணத்தினால்தான், ராஜினாமா செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைத்திருக்கிறேனே தவிர, வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது இந்தத் தகவல் சட்டமன்றத்தில் ஏன் தெரிவிக்கப்படவில்லை என்று கேட்கிறார். அவர் கேட்கின்ற கேள்வி correct. அந்தத் தகவல் மத்திய அரசாங்கத்திடமிருந்து எங்களுக்குக் கடிதம்மூலம் தெரிவிக்கப்படவில்லை. "நீங்கள் அனுப்பிய மசோதாவை நாங்கள் நிராகரித்துவிட்டோம்; இந்தக் காரணத்திற்காக நாங்கள் நிராகரித்துவிட்டோம்" என்று சொல்லியிருந்தால், அதைக் கண்டிப்பாக இந்த நாட்டு மக்களுக்கும், இந்த அவைக்கும் நாங்கள் தெரிவித்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை, இந்த நிமிடம் வரை மத்திய அரசாங்கத்திடமிருந்து எந்தவித தகவலும் வரவில்லை. "Withheld" என்றுதான் கடிதம் வந்திருக்கிறது. "Withheld" என்றால், யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள், 'நிறுத்திவைக்கப்பட்டுள்ளது' என்றுதான் அர்த்தம். அதற்கு நாங்கள் உடனடியாக கடிதமும் எழுதிவிட்டோம். எந்தக் காரணத்திற்காக நிறுத்திவைக்கப்பட்டது என்பதை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுவிட்டோம். இன்றுவரை அதற்கான பதில் மத்திய அரசாங்கத்திடமிருந்து வரவில்லை. அவ்வாறு பதில் வந்திருந்தால், அந்த பதிலையும்

[திரு. சி.வி. சண்முகம்] [2019 ஜூலை 10

கண்டிப்பாக இந்த அவையில் தெரிவித்திருப்போம். அதைத்தான் நாங்கள் சொன்னோம். எதற்காக Withheld செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறோம். (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) அதற்குக் குடியரசுத் தலைவரிடமிருந்து எங்களுக்குப் பதில் வரவில்லை என்பதைச் சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பதில் சொல்கிறார். சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: இங்கே பல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். Limitation பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஒரு வழக்கு தாக்கல் செய்தவுடனே, எத்தனை மாதத்திற்குள் அந்த வழக்கில் விசாரணை நடத்த வேண்டும்; எத்தனை மாதத்திற்குள் charge sheet போட வேண்டுமென்று குறிப்பிட்ட கால அளவு இருக்கிறது. Limitation இருக்கிறது. அதேபோன்றுதான் இதுவும். நாம் கடிதம் எழுதிவிட்டோம். அது தொடர்பாக "உங்களுக்கு இதைக் கொடுக்கிறோம் அல்லது கொடுக்கவில்லை" என்று மத்திய அரசிடமிருந்து பதில் கடிதம், உதாரணத்திற்கு 10 ஆம் தேதி குறிப்பிட்டு வந்திருந்தால், அந்த 10 ஆம் தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் நாம் அவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். ஆனால் இன்றுவரைக்கும் அதுபோன்று கடிதம் எதுவும் வரவில்லை. அதைத்தான் நாங்கள் சொன்னோம். வேறு எதையும் மறைக்க வேண்டுமென்ற உள்நோக்கம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை. இன்றைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, NEET தேர்வு குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறது. அந்த வழக்கை மாண்புமிகு அம்மாவின் அரசு கடுமையாக நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, "NEET விவகாரத்தில் மத்திய அரசிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தை ஏன் இந்த அவைக்குத் தெரிவிக்கவில்லை." இரண்டாவதாக, "19 மாதங்களாக இதுகுறித்து எந்தத் தகவலும்

2019 ஜூலை 10] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

சொல்லவில்லை. ஏன் நீங்கள் மறைத்திருக்கிறீர்கள்?" என்றெல்லாம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சரியான விளக்கம் சொல்லியிருக்கின்றார். சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புப் புத்தகம் என்னிடத்திலே இருக்கிறது. நீங்கள் எந்தக் கடிதத்தை வைத்துப் பேசுகிறீர்களோ, அதே கடிதம் என்னுடைய கைகளிலும் இருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார். 'Hon'ble President has withheld his assent' என்று சொல்லியிருக்கிறார். இது 22–9–2017 ஆம் தேதி நமக்கு வந்திருக்கிறது.

முற்பகல் 11–25

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் 2018 ஆம் ஆண்டு ஜூன் 28, அன்று இந்தச் சட்டமன்றத்தில் ஒரு கேள்வி நேரத்தில் எழுப்புகிறார். அதைத் தொடர்ந்து எனக்கும், அவருக்கும் விவாதம் நடைபெறுகிறது. அதிலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . ." என்று 2018 ஆம் ஆண்டே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "19 மாதங்களாக இதுகுறித்து அவையில் ஏன் தெரிவிக்கவில்லை" என்று இப்பொழுது கேட்டார்கள். (குறுக்கீடுகள்) 'பேசப்படவில்லை' என்று அவர் சொன்னார். (குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) அவர் கேட்டதைத்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதைப் படிக்கிறேன். "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டரீதியாக அரசு அணுகுகிற முறைகளையெல்லாம் சொல்கிறார், நான் ஏற்றுக்கொள்கின்றேன்; அதில் நான் கருத்து மாறுபாடு கொள்ள விரும்பவில்லை. நான் கேட்கின்ற கேள்வி, இதே அவையிலே, இரண்டு மசோதாக்கள், ஏகமனதாக, ஒருமனதாக 1–2–2017 அன்று நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி அவர்களின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவை எந்த நிலையில் இருக்கின்றன? அதுகுறித்து இந்த அரசு விளக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குக் கேட்டிருக்கின்றார்.

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 10

அதற்கு நான், "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனாதிபதி அவர்கள், அதை withheld செய்து வைத்திருக்கிறார்." (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனாதிபதி அவர்கள், அதை withheld செய்து வைத்திருக்கிறார். அந்தத் தகவல், துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏன் withheld செய்யப்பட்டுள்ளது? என்று நம்முடைய அரசின் சார்பில் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்." (மேசையைத் தட்டும் ஒலி) என்று 2018 ஆம் ஆண்டு இந்த அவையில் நான் பதிலளித்திருக்கிறேன். இது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதை நான் சொல்லியிருக்கிறேன். பேரவையினுடைய நடவடிக்கைக் குறிப்பு புத்தகத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த அரசு நீட் தேர்வு விவகாரத்தில் மிகத் தெளிவாக இருக்கிறது; உறுதியாக இருக்கிறது; எந்த diversion–ம் கிடையாது; ரொம்ப வெளிப்படையாக இருக்கிறது; எந்தக் கருத்தையும் எந்தக் காலத்திலும் மறைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கருத்து என்னவெனில், நீங்கள் இந்தப் பிரச்சினையை இன்றைக்கு எழுப்புவதற்குக் காரணம், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, 2010 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியின்போது, notification–ஐப் போட்டார்கள். அப்போது, காங்கிரஸ் கட்சி ஆட்சியில் கூட்டணியில் நீங்கள் இருந்தீர்கள். பிள்ளையை நீங்கள் கிள்ளிவிட்டீர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டிலையும் நீங்கள் ஆட்டிவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் இந்த மாமன்றத்தில் பகிரங்கமாக சொன்னதை diversion செய்வதற்காக, இந்தக் கருத்தை பொது மக்களிடத்தில் வேறுவிதமாக திசை திருப்புவதற்காக, இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் சொல்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கே, யாரைக் கண்டிக்க வேண்டும் என்று சொன்னேன்.

2019 ஜூலை 10] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

யாரைக் கண்டிக்க வேண்டும் என்பதற்கான வரலாறுகளை நான் எடுத்து வைத்திருக்கிறேன். இது மக்கள் மன்றத்திற்குச் சென்றிருக்கிறது; Media*–விற்கும் சென்றிருக்கிறது. ஆகவே,* diversion *செய்வதற்காக இந்தக் கருத்தை நீங்கள் தெரிவிக்கிறீர்கள். நாங்கள் எங்கள் கொள்கையிலே உறுதியாக இருக்கிறோம்; எந்த மாற்றமும் இல்லை; இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறோம். நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள், நான் பதிலளித்திருக்கிறேன். இது அவைக் குறிப்பேட்டில் இருக்கிறது.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இதுகுறித்து பலமுறை பேசியிருக்கிறோம்; பலமுறை நீங்கள் பதில் சொல்லியிருக்கிறீர்கள்; இல்லையென்று சொல்லவில்லை. நேற்று முன்தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் என்ன? அதுதான் என்னுடைய கேள்வி. ஆக, அதிலிருந்து இது மாறுபட்டு இருக்கிறதா, இல்லையா? ஆகவே, இது வந்தவுடனேயே ஏன் இந்த அவையிலே அதுகுறித்துத் தெரிவிக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, இங்கே நான் கேட்டிருக்கின்ற கேள்விக்கு, முறையான பதிலை, சரியான விளக்கத்தை அவர்கள் இந்த அவைக்குத் தராத காரணத்தால், அதைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்கிற வகையில், வெளிநடப்புச் செய்கிறோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீட் விவகாரம் குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் கொள்கை என்ன என்பது பற்றி மிகத் தெளிவாக இரண்டு நாட்களுக்கு முன்னதாக உங்களுக்குக் கூறினோம். 2010–ல் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணியில் இருந்தது. அப்போது,*

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 10

காங்கிரஸ் ஆட்சியில் இந்த notification–ஐ அவர்கள் போட்டார்கள். (குறுக்கீடுகள்) அதுதான் இந்த நீட் பிரச்சினைக்குக் காரணம். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று நாங்கள் தீர்ப்பினைப் பெற்றோம். தீர்ப்பை எதிர்த்து சீராய்வு மனு போட வேண்டாம் என்று சொன்னோம். நாங்கள் சீராய்வு மனு போட வேண்டாம் என்று கூறியதற்குப் பிறகும், தொடர்ந்து நீங்கள் சீராய்வு மனுவைப் போட்டீர்கள். (குறுக்கீடுகள்) இந்தக் கதையையெல்லாம் சொல்லி முடித்த பிறகு, கடைசியாக, சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர், (குறுக்கீடு) நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்பதுபோல, (குறுக்கீடு) இல்லை, இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: செய்த பாவத்திற்கு பதிலைக் கேட்டுத்தானே ஆகவேண்டும். (குறுக்கீடு) செய்த பாவத்திற்குக் கேட்டுத்தானே ஆகவேண்டும்? (குறுக்கீடு) 2010–ல் பாவம் செய்தது நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு கேள்வி. உங்களுடைய ஆட்சிக் காலத்தில், இதற்கான notification–ஐ போட்டீர்களா, இல்லையா? (குறுக்கீடு) ஏனென்றால், அவையெல்லாம் record–ல் இருக்கிறது.

2019 ஜூலை 10][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

Record–ல் இருப்பதை யாராலும் மறைக்க முடியாது. அதுதான் இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம். இன்றைக்கு இந்த அவையிலே இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டதற்குக் காரணம் அதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீட் தேர்வு வருவதற்கு முக்கிய பங்கு வகித்தது காங்கிரஸ் கட்சி என்பதை மறுக்க முடியாது.

முற்பகல் 11–30

ஆகவே, கேட்டதற்கெல்லாம் இரண்டு நாட்களுக்கு முன்பாகவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லிவிட்டார்கள். இதில் யாரும் மறைப்பதற்கே ஒன்றும் கிடையாது. ஆகவே, நீங்கள் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற காலக்கட்டத்திலே இதைக் கொண்டு வந்தீர்கள். இப்பொழுது இருக்கின்ற மத்திய அரசாங்கம் அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அதை முறியடிப்பதற்காக, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற மாணவர்களினுடைய நலன் கருதி, அனைவரும் ஒருமித்த கருத்தோடு நாம் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதில் எந்தவித மாறுபட்ட கருத்தும் கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, இந்த அரசும் சரி; இதற்காக முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே, சட்டரீதியாகவும் நாம் அணுகினோம்; மத்திய அரசையும் அணுகினோம். நாங்கள் பல முறை பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து மனு கொடுத்தோம். எங்களால் எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு NEET தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்களிக்க வேண்டுமென்று கேட்டோம். எந்த அளவிற்கு முயற்சி செய்ய வேண்டுமோ, அந்த அளவிற்கு முயற்சி செய்தோம். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் மத்தியிலே அப்போது காங்கிரஸ் ஆட்சி இருந்தது; இப்போது பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இருக்கின்றது. எனவே, ஆட்சி அதிகாரத்திலே இருந்தவர்கள் நீங்கள். நீங்கள் notification–ஐ போட்டதால்தான் இவ்வளவு பிரச்சினையும் உருவாகியிருக்கிறது என்ற விளக்கத்தைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சி இருக்கும்போது இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகச் சொல்கிறீர்கள். அதில் தெளிவாக இருக்கிறது; தெளிவாக இருக்கிறது. அதில், "அந்தந்த மாநிலங்கள் விரும்பினால்" (குறுக்கீடு) இருக்கிறது. இல்லையென்றால் நாங்கள் தருகின்றோம். (குறுக்கீடுகள்) "அந்தந்த மாநிலங்கள் விரும்பினால் ஏற்றுக்கொள்ளலாம்" அப்படியென்று இருக்கிறது. (குறுக்கீடு) நம்பர் ஒன்று. (குறுக்கீடு) ஐயா, நான் பேசி முடித்தவுடன், பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) இரண்டாவதாக, எங்கள் தேர்தல் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) ஏன் சார்? பேசவிடுங்கள். தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அந்தந்த மாநிலங்கள் விரும்பினால்தான்; இல்லையென்றால் இல்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், தொடர்ந்து இரண்டு நாட்களாக காங்கிரஸ் கட்சியின்மீது குற்றம் சுமத்துவதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். ஆனால், ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர்கள் குறித்து ஆதாரம் இல்லாமல் திடீரென்று இப்படியெல்லாம் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இதையெல்லாம் நீங்கள் இப்படிச் சொல்வது முறை அல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் விவாதத்திலே பேசுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் மீதெல்லாம் வழக்கு போட்டு, யார் யாரெல்லாம் ஜாமீன் பெற்றிருக்கிறார்கள் என்பது நாட்டுக்கே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை யாரும் மறைக்க வேண்டியதே இல்லை. தினந்தோறும் வாய்தா வாங்கிக் கொண்டிருப்பவர்கள் யார் என்று மக்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) ஆகவே, இதைப்பற்றி சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசி, விவாதத்தை வேறு திசைக்கு மாற்ற வேண்டாம். ஏனென்றால், இதற்குள்ளேயே பேசுங்கள். ஆகவே, இதற்கு மூல காரணமே மத்தியில் ஆட்சியில் இருந்த நீங்கள்தான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2019 ஜூலை 10][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அந்தக் காலகட்டத்திலே NEET தேர்வைக் கொண்டுவருவதற்கு நீங்கள்தான் காரணம் என்றுதான் அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதைக் கொண்டுவராமல் இருந்திருந்தால், இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்லை. அன்றையதினம் notification போட்டதுதான் இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம். இது அமலுக்கு வருவதற்கு இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவதற்கு அதுதான் காரணம். அதனால்தான் இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு பதட்டம் வேண்டாம்; tension–ம் வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் என்பதால் சொல்கிறேன். இப்பொழுது அவர் சொன்னதையெல்லாம் நன்றாக அனைவரும் கேட்டீர்கள். "நாங்கள் notification போட்டோம்" என்று அண்ணன் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். "ஆனால், notification போட்டதில் நாங்கள் ஒன்றைத் தெளிவாகப் போட்டோம்" என்று சொல்கிறார். என்ன தெளிவாகப் போட்டீர்கள்? அந்தந்த மாநிலங்கள் விரும்பினால், எந்தெந்த மாநிலங்கள் விரும்புகிறார்களோ, அதற்கு விலக்கு பெற்றுக்கொள்ளலாம் என்று தெளிவாகப் போட்டிருக்கின்றோம் என்று சொல்கிறார். அப்படியென்றால், நீங்கள் தெளிவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து கேட்க வேண்டும். 2010 ஆம் ஆண்டு நீங்கள் notification போட்டபோது, ஆளுங்கட்சியாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அப்பொழுது NEET–ஐ நீங்கள் போட்டீர்கள்; அவர்கள் விரும்பினார்களா, விரும்பி அதை ஏற்றுக்கொண்டார்களா என்பதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். அந்த மாதிரி provision இல்லை. 'நாங்கள் provision கொடுத்தோம்' என்று நீங்கள் சொன்னீர்களென்றால், நீங்கள் direct–ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குற்றம் சாட்டுகிறீர்கள் என்று அர்த்தம். அப்படித்தானே? அந்தந்த மாநிலங்கள் விரும்பினால் ஏற்றுக்கொள்ளலாம் என்றால், 2010 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சியில்

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2019 ஜூலை 10

இருந்தது. அப்பொழுது அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா; (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் போட்டீர்கள்; அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள், அப்படித்தானே சொல்ல வருகிறீர்கள்? அந்த ஒப்புதலை அவர்கள் முன்பாகவே சொன்னால், எங்களுக்குத் திருப்தியாக இருக்கும். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–35

இதிலிருந்து நான் இன்னொன்றையும் சொல்கிறேன், உயர் நீதிமன்றத்தில் அன்றைக்கு வழக்கு வந்தது. உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதியே சொல்லியிருக்கிறார். "NEET–ஐ வைத்து தயவுசெய்து நீங்கள் அரசியல் செய்யாதீர்கள்" என்று உயர் நீதிமன்ற மாண்புமிகு நீதியரசரே சொல்லியிருக்கிறார். அதையேதான் நானும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நானும் அதைத்தான் சொல்கிறேன். இன்றைக்கு நீங்கள், பெற்றோர்கள் மற்றும் படித்துக் கொண்டிருக்கின்ற மாணவ, மாணவியர் மத்தியிலே பயத்தை ஏற்படுத்திவிடக் கூடாது. NEET தேர்வில் விலக்கு என்ற கொள்கையில் அரசு உறுதியாக இருக்கிறது. ஆனால், உச்ச நீதிமன்ற Bench–னுடைய தீர்ப்பின்படி, மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய கேள்வி, என்னுடைய பதில், படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களை எந்தக் காலத்திலும் குழப்பிவிடக் கூடாது. இதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் தயவுசெய்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் ஏற்கெனவே சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன். நீங்கள் கோபப்பட்டாலும் பரவாயில்லை. நான் இன்னொன்றையும் சொல்கிறேன். அனிதா என்ற மாணவியினுடைய இறப்பை வைத்து எல்லோரும் அரசியல் செய்தீர்கள். அன்றைக்குக்கூட நான் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். இன்றைக்கு நான் அதைச் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு என்னை நீங்கள் தள்ளியிருக்கிறீர்கள். அனிதா என்ற மாணவி இறந்துவிட்டார். அந்த நிகழ்வு எல்லோருடைய நெஞ்சையும் பிழியக்கூடிய அளவிற்கு, வருத்தப்படக்கூடிய அளவிற்கு இருந்தது. எங்களுக்கும் வருத்தம், எல்லோருக்கும் வருத்தம். இறந்த அந்த மாணவியினுடைய பெற்றோரை, குடும்பத்தினரை நேரடியாக அழைத்து, நானும் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நேரடியாக அழைத்துச் சென்றேன். அவர்களிடம் 10 இலட்சம் ரூபாய் நிதி கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அரசு வேலைவாய்ப்பையும் மாண்புமிகு

2019 ஜூலை 10] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். எங்களுடைய மக்கள் நல்வாழ்வுத் துறையில் அந்த வேலைவாய்ப்பை உறுதிப்படுத்திக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுகூட அவர்கள் என்னிடத்திலே பகிர்ந்து கொண்டார்கள். ஏனென்று சொன்னால், அந்த மாணவி NEET–க்கு விலக்கு கேட்டு, டெல்லிவரை எங்களோடு வந்தவர். ஏன் அவர் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்? சொன்னால், உங்களுக்குக் கோபம் வரும். உங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் திருமதி நளினி சிதம்பரம் Court–ல் தீர்ப்பு வந்தவுடனே, வெளியில் வந்து பேட்டி கொடுக்கின்றார். (குறுக்கீடுகள்) 'இனி தமிழகத்தில் எந்தக் காலத்திலும் NEET–க்கு நீங்கள் விலக்கு பெறவே முடியாது, முடிந்துவிட்டது' என்று அவர் டி.வி.–யில் பேட்டி கொடுக்கின்றார். அதைப் பார்த்த மாணவர்கள்தான் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அதற்குக் காரணம் நீங்கள்தான் என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் போதும். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த விவாதம் போதும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நான் ஏதோ இந்தச் சபைக்கு தவறான தகவல் கொடுத்ததாகவும், அரசுக்கு வந்த தகவலை சட்டமன்றத்திலே தெரிவிக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறார். மேலும், நான் தவறான தகவல் சொல்லியதாக இங்கே சொல்லி, 'நீங்கள் ராஜினாமா செய்யத் தயாரா?' என்றும் கேட்டிருக்கிறார்கள். சட்டத் துறை அமைச்சர் என்ற முறையில், இப்பொழுது நான் அதற்கு முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். எந்த நிலையிலும் இவர்களைப் போன்று, இன்றைக்கு ஒன்று சொல்வது; நாளைக்கு ஒன்று சொல்வது என்பது என்னுடைய பழக்கம் இல்லை. நான் முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான், 8–7–2019 அன்று இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியதை, மீண்டும் ஒரு முறை இங்கே நினைவுபடுத்தக்

[திரு. சி.வி. சண்முகம்] [2019 ஜூலை 10

கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நான் தவறான தகவல் சொன்னதாக அவர் சொன்னதால், அதை நான் மீண்டும் பதிய வைக்க விரும்புகிறேன். அதற்கு தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். 8–7–2019 அன்று நான் இந்தச் சபையிலே பேசியது;

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அந்த 2 மசோதாக்களும் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதியன்று தமிழக அரசினுடைய அந்த இரண்டு மசோதாக்களும் Withheld. அதாவது, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் மத்திய அரசிடமிருந்து தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதுகுறித்து ஏற்கெனவே, (குறுக்கீடு) இல்லை, இது நான் சொன்னது. வேண்டுமானால் அதை நான் திருத்திக்கொள்கிறேன். இங்கு வந்த தகவல். மாதம் வேறு இருக்கலாம். ஆனால், வந்த தகவல் உண்மை. "அதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் எழுப்பியதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்த இரண்டு மசோதாக்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல் வந்துள்ளது" என்று இங்கே தெரிவித்தார். ஏற்கெனவே, அந்தத் தகவலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். நான் மறைக்கவில்லை. "நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன" என்பது குறித்த தகவல் வந்துள்ளது என்று இங்கே தெரிவித்தார். பின்னர், என்ன காரணங்களுக்காக அந்த மசோதாக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்து விளக்கங்களைத் தருமாறு, தமிழக அரசின் சட்டத் துறையின் சார்பாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. ஆனால், இன்றைய தேதிவரை அந்த இரண்டு மசோதாக்களும் என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்ற விவரம் மத்திய அரசால் தெரிவிக்கப்படவில்லை.

இந்த இடைப்பட்ட காலத்தில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் இருந்தது. அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசினுடைய வழக்கறிஞர், ஒரு இ–மெயில் தகவல் மத்திய அரசிடமிருந்து, ராஷ்டிரபதி பவனில் உள்ள Under Secretary மூலமாக வந்ததாக ஒரு தகவலை நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார். நீதிமன்றத்தில், புதிதாக "Withheld" என்று

2019 ஜூலை 10] [திரு. சி.வி. சண்முகம்]

சொல்லப்பட்டிருக்கிறது. 'Withheld' என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால், நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்று அதற்குப் புதிதாக ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். 'Withheld' என்பதற்கு நிராகரிக்கப்பட்டிருப்பதாக அவர் விளக்கம் தெரிவித்ததாக, நான் சொல்லியிருக்கிறேன். அதை மறைக்கவில்லை. நமக்குத் தெரிந்து, Dictionary–ல் Withheld என்றால், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

முற்பகல் 11–40

ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை அன்று நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் 'நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது' என்பதை 'நிராகரிக்கப்பட்டுள்ளதாக' சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தில் அந்தத் தகவலை சொல்லியிருக்கிறார்கள். இதுவரையிலும் மத்திய அரசாங்கத்திடமிருந்து அந்தத் தகவல் நமது அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. அப்படியே அந்தத் தகவல் வரும்பட்சத்தில், நீதிமன்றத்தில் சொல்வதை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். அப்படியிருக்கும்பட்சத்தில். அந்த மசோதா என்ன காரணத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தைத் தெரிவிக்குமாறு தமிழக அரசின் சார்பாகக் கடிதம் எழுதப்பட்டதை, மீண்டும் வலியுறுத்தி—நீதிமன்றத்தில் 'நிராகரிக்கப்பட்டுள்ளது' என்று சொன்ன காரணத்தினால், என்ன காரணத்திற்காக அவை நிராகரிக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை தமிழக அரசுக்குத்தெரிவிக்கும்பட்சத்தில்,—அதில்ஏதாவதுகுறைகள் இருக்கும்பட்சத்தில்,— இப்போதுதான் Cause of Action வரும்.— மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்த மன்றத்திற்கு 6 மாதத்திற்குள் ஒரு மசோதா திருப்பி அனுப்பப்பட்டால், 6 மாதத்திற்குள்ளாக அந்த மசோதா மீண்டும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்கிறார். எப்போது? அதற்கு Cause of Action வர வேண்டும். நமக்கு இன்றுவரை வரவில்லை. நாம் மசோதாவை அனுப்பிவிட்டோம். ஆனால், அந்த மசோதா நமக்குத் திரும்பி வரவில்லை. ஆனால், 'Withheld' என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். என்ன காரணம் என்ற விவரத்தைத் தெரிவிக்கவில்லை. காரணம் தெரிந்தால்தானே அந்த மசோதாவிலுள்ள குறைகளை நாம் நிவர்த்தி செய்து அனுப்ப முடியும்? எதையுமே அவர்கள் தெரிவிக்கவில்லை.

ஆகவே, மத்திய அரசிடமிருந்து நிராகரிக்கப்பட்டுள்ளதற்கான காரணம் குறித்து தமிழக அரசுக்கு தகவல் வரும்பட்சத்தில், அதில்

[திரு. சி.வி. சண்முகம்] [2019 ஜூலை 10

ஏதாவது குறைகள் இருக்கும்பட்சத்தில், அந்தக் குறைகள் நிவர்த்தி செய்து அனுப்பப்படும். தமிழகத்தில் NEET தேர்விற்கு விலக்களிக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி, மீண்டும் அந்த மசோதாவை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க தமிழக அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். எங்கே நான் மறைத்திருக்கிறேன்? எங்கே இந்தத் தகவலை நான் மறைத்திருக்கிறேன்? எதற்கெடுத்தாலும் 'ராஜினாமா செய்'; எதை எடுத்தாலும் 'ராஜினாமா செய்' என்று சொல்வது இவர்களுக்கு வாடிக்கையாகப் போய்விட்டது. நீங்கள் என்ன 'கனவு' கண்டாலும் சரி, என்ன 'தண்ணீர்' குடித்தாலும் சரி; அம்மா அவர்களுடைய அரசு 5 ஆண்டு காலத்திற்கு நிலைத்து நின்று (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் அம்மா அவர்களுடைய ஆட்சிதான் இங்கே வரும். உங்களுடைய கனவு எந்தக் காலத்திலும் நிறைவேறாது; நிறைவேறாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கரி. இராமசாமி, இந்த விவாதம் போதும். நிறைய பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, பின்னர் ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டிவரும். (குறுக்கீடு) இல்லை, போதும் இந்த விவாதம். நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் அதற்கு பதில் சொல்லிவிட்டார். மேற்கொண்டு நேரமில்லை. (குறுக்கீடு) நேரமில்லை. (குறுக்கீடு) ஒரு பொருள் குறித்து பேசுவதற்கு உங்களுடைய தலைவருக்குப் போதுமான அளவிற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டு, அவர் விளக்கம் சொல்லிவிட்டார். நீங்கள் திரும்பத், திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்தால் எனக்கு நேரமில்லை. (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் இப்படித் தொடர்ந்து விவாதம் செய்தால், அதற்கு அமைச்சர் பதில் தருவார். திரும்பவும் நீங்கள் எழுந்து விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்? (குறுக்கீடு) இதற்கு எப்படி நான் வாய்ப்புத் தருவது? சபையினுடைய நேரத்தை இதற்கே நீங்கள் எடுத்துக்கொண்டால், மற்ற அலுவல்களை நான் எப்போது எடுத்துக்கொள்வது? (குறுக்கீடு) யார்? (குறுக்கீடு) அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) அவர் விளக்கத்திற்கு நீங்களும் விளக்கம் சொல்லியாகிவிட்டது. திரும்பவும் நீங்கள் இந்த அவையின் நேரத்தை எடுத்துக்கொள்வது சரியல்ல. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET பிரச்சினை குறித்த விவாதம்

2019 ஜூலை 10] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வந்தபோதுதான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சொன்னார்கள். அவர் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. என்ன காரணத்திற்காக அந்தப் பிரச்சினை ஏற்பட்டது? NEET தேர்வில் தமிழகத்திற்கு விலக்களிக்கக்கூடிய சூழ்நிலையிலே, இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை அவர் பெற்றுத் தந்தார். நாங்கள் பெயர் சொல்லக் கூடாது. நீங்கள்தான் பெயர் சொல்லக் கூடாது என்று சொல்லிவிட்டீர்களே; ஆனால், அந்த வழக்கில் அவர் வாதாடியதைச் சொல்லித்தானே ஆக வேண்டும். அப்போது நீதிமன்றத்திற்கு வெளியே வந்து சொல்கிறார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார். அது Court–ல் நிராகரிக்கப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட இன்றைக்குச் சொல்கிறார். அந்த ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் மாறுபடுகிறது என்று எங்கள் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். ஆகவே, நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது ஒரு பொதுப் பிரச்சினை; பொதுப் பிரச்சினை என்று வருகின்றபொழுது, ஒரு முக்கியமான, உணர்வுப்பூர்வமான பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றபொழுது, இதிலே involve ஆனவர்களின் பெயரைச் சொல்லித்தானே ஆக வேண்டும். இதில் யார் வாதாடினார்கள் என்று உங்களுக்குத் தெரியும். நாம் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் மக்களுக்குத் தெரியும். ஆகவே, இதில் என்ன தவறு இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) வாதாடினார்களா, இல்லையா? அதற்காக வாதாடி, NEET தேர்விற்கு விலக்களிக்கக்கூடிய சூழ்நிலையிலே, அதற்கு எதிராக ஒரு தீர்ப்பைப் பெற்றுத் தந்தார்களா, இல்லையா? நீங்களே சொல்லுங்கள் பார்க்கலாம். நீங்களும் தமிழகத்தில் NEET தேர்வு வரக் கூடாது என்று சொல்கிறீர்கள். அப்படி எல்லோரும் எண்ணுகின்றபோது, இதற்கு எதிராக அந்த வழக்கில் ஒருவர் ஆஜரானால், அதனை நாம் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும்? அதற்கு நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, நேரம் இல்லை. இந்தப் பொருள் குறித்துப் பேச நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, இந்தப் பொருள் குறித்து மேலும் நேரம் ஒதுக்குவதற்கு வாய்ப்பு இல்லை. வேறு ஏதாவது இருந்தால் பின்னர் பார்க்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.